**<u>சார்பு நீதிமன்றம், திருத்துறைப்பூண்டி</u>**

முன்னிலை.திரு.கே.சக்திவேல், எம்.ஏ., எல்.எல்.எம்.,

சார்பு நீதிபதி, திருத்துறைப்பூண்டி (மு.கூ.பொ)

2054 திருவள்ளுவராண்டு ஸ்ரீசோபகிருது வருடம் ஐப்பசி 16 ம் நாள்

2023 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 2 ம் நாள் வியாழக் கிழமை

**<u>அசல் வழக்கு எண். 101/2023</u>**

<u>(CNR NO.TNTV1400-0498-2023)</u>

கே.பால்ராஜ் ---வாதி

எதிர்

பிருந்தா ----பிரதிவாதி

இவ்வழக்கு 12.10.2023 அன்று இந்நீதிமன்றத்தின் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்தபோது வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.கோ.தர்மராஜன் அவர்கள் ஆஜராகியும், பிரதிவாதியை அழைத்தும் ஆஜரின்மையால் அவரை தோன்றாத் தரப்பினராக வைத்தும், வாதி தரப்பு ஆவணங்கள் மற்றும் சாட்சியங்கள் பரிசீலனை செய்த பின்னர் இன்று (02.11.2023) இந்நீதிமன்றம் வழங்கும்.

**<u>தீர்ப்புரை</u>**

1) பிரதிவாதியிடமிருந்து வாதிக்கு கடனுறுதிச் சீட்டின் பேரில் வர வேண்டிய தொகை ரூ.1,15,488/- ஐ 12 % பின்வட்டி செலவுத் தொகையுடன் வசூல் செய்வதற்காக தாவா வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>2. வாதித்தரப்பு வழக்குரையின் சுருக்கம் பின்வருமாறு</u> :-**

வாதி தனது அவசர தேவைக்காக 1.9.2017 ம் தேதி ரூ.85,000/-ஐ கடனாக பெற்றுக் கொண்டு அத் தொகைக்கு மாதம் 1 க்கு ரூ.100/- க்கு ரூ.1/- வீதம் வட்டி செலுத்த ஒப்புக்கொண்டு அதே தேதியில் தக்க சாட்சிகள் முன்னிலையில் ஒரு கடனுறுதிச்சீட்டு எழுதிக் கொடுத்துள்ளார். குறித்த தேதியில் பிரதிவாதி பணத்தை திரும்ப

செலுத்தாமல் வாதி கேட்கும் போதெல்லாம் வீண் காரணங்களை கூறி இழுத்தடித்து வந்ததால் வாதி கடந்த 10.8.2020 அன்று தனது வழக்கறிஞர் மூலமாக ஒரு அறிவிப்பு கொடுத்தார் அந்த அறிவிப்பினை பிரதிவாதி 13.8.2020 ல் பெற்றுக் கொண்டு தவறான சங்கதிகள் கண்டு 19.8.2020 ம் தேதி ஒரு பதில் அறிவிப்பு கொடுத்துள்ளார். மேற்படி பதில் அறிவிப்பில் வாதியிடம் பிரதிவாதி தொடர்ந்து கடன் தொகைகள் பெற்று முறையாக அசல் வட்டி தொகையை கொடுத்து வந்ததாகவும், பிரதிவாதியிடம் நிரப்பப்படாத பேப்பரில் கையெழுத்து பெற்று கடன் கொடுத்து வந்ததாகவும், கடைசியாக வாதியிடம் பிரதிவாதி ரூ.30,000/- மட்டுமே சுமார் 3 ஆண்டுகளுக்கு முன்பு பெற்று அதற்கு முறையாக மாதந்தோறும் ரூ.1500/- வட்டி கொடுத்த வந்ததாகவும் 30 மாதங்கள் வட்டி கொடுத்து வந்து சுமார் 3 மாதங்களாக வட்டி கொடுக்காமல் போய்விட்டதாகவும் ஆகவே வாதி பெற்று வைத்திருந்த வெற்று பேப்பரில் கையெழுத்திடப்பட்ட பேப்பரை ரூ.85,000/- க்கு பூர்த்தி செய்து அறிவிப்பு கொடுத்துள்ளதாகவும், அந்த வகையில் மேற்படி தொகையை கணக்கிட்டு உளவடைத்து பாக்கியை கொடுத்து தயாராக உள்ளதாகவும் தவறாக கூறி பதில் அறிவிப்பு கொடுத்துள்ளார். ஆகவே இந்த தாவாவானது வாதியால் தாவா தொகை மற்றும் பின்வட்டி செலவுத் தொகையை கேட்டு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3.** வாதி தரப்பில் வாதி கே.பால்ராஜ் வா.சா.1 ஆக விசாரணை செய்யப்பட்டு வாதி தரப்பில் வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.4 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**4.** வாதித்தரப்பில் வா.சா.ஆ.1 ஆக வாதிக்கு பிரதிவாதி எழுதிக் கொடுத்த கடனுறுதிச்சீட்டும், வா.சா.ஆ.2. ஆக வாதி கொடுத்த வழக்கறிஞர் அறிவிப்பும் வா.சா.ஆ.3. ஆக மேற்படி அறிவிப்பை பிரதிவாதி பெற்றுக் கொண்டதற்கானஅஞ்சல் ஒப்புதலட்டையும் வா.சா.ஆ.4. ஆக பதில் அறிவிப்பும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

6. **வாதி கோரியுள்ள பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கதா? என்று தீர்மானம் செய்ய வேண்டியுள்ளது**.

வாதி தரப்பில் குறியீடு செய்யப்பட்ட மேற்கண்ட வா.சா.ஆ-1 முதல் வா.சா.ஆ-4 வரையிலான சான்றாவணங்களை பார்வையிட்டு பரிசீலனை செய்ததில் பிரதிவாதி வாதியிடம் கடன் வாங்கியிருந்தார் என்பது தெளிவாக தெரிகிறது. மேற்படி சான்றாவணங்களிலிருந்து வாதியிடம் பிரதிவாதி கடன் தொகையை திரும்ப செலுத்த வில்லை என்பது வாதித்தரப்பு வழக்கு சாட்சியம் மற்றும் சான்றாவணங்களின் அடிப்படையில் நிரூபணம் செய்யப்பட்டுள்ளது. ஆகவே பிரதிவாதி தாவா தொகையை வாதிக்கு செலுத்த கடமைப்பட்டவர் ஆவார் என்பதால் வாதி கோரியுள்ள பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கது என்று தீர்மானிக்கப்படுகிறது.

**7.** இறுதியாக, தாவா செலவுத்தொகையுடன் தீர்ப்பாணை பிறப்பிக்கப்படுகிறது. வாதிக்கு பிரதிவாதி தாவா தொகை ரூ.1,15,488/- ஐயும், அசல் தொகை ரூ.85,000/- க்கு வழக்கு தாக்கல் செய்த நாள் முதல் திரும்ப செலுத்தும் நாள் வரை 6% பின் வட்டியுடன் பிரதிவாதி வாதிக்கு செலுத்த வேண்டும் என்று தீர்ப்பளிக்கப்படுகிறது. தீர்ப்பாணை தொகையை செலுத்துவதற்கு இத்தீர்ப்பாணை தேதியிலிருந்து மூன்று மாதம் கால அவகாசம் வழங்கப்படுகிறது.

இத்தீர்ப்பானது என்னால் சுருக்கெழுத்து - தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு, இன்று 2023 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 2 ஆம் நாள் என்னால் இந்நீதிமன்ற அவையறியப் பகரப்பட்டது.

K SAKTHIVEL

Digitally signed by K SAKTHIVEL
DN: cn=K SAKTHIVEL, ou=CHENNAI, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamilnadu, c=IN
Date: 2023.11.03 16:01:00 +0530

சார்பு நீதிபதி, (மு.கூ.பொ)

திருத்துறைப்பூண்டி.

பின் இணைப்பு

**வாதி தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சி**

வா.சா.1 திரு. கே.பால்ராஜ்

வாதி தரப்பில் குறியிடப்பட்ட சான்றாவணங்கள்.

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.1 | 1.9.2017 | வாதிக்கு பிரதிவாதி எழுதிக் கொடுத்த கடனுறுதிச்சீட்டு |
| வா.சா.ஆ.2 | 10.8.2020 | வாதி பிரதிவாதிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு நகல் |
| வா.சா.ஆ.3 | 13.8.2020 | பிரதிவாதி மேற்படி அறிவிப்பினை பெற்றுக் கொண்டதற்கான அஞ்சல் ஒப்புதலட்டை |
| வா.சா.ஆ.4 | 19.8.2020 | பிரதிவாதி கொடுத்த பதில் அறிவிப்பு |

**3. பிரதிவாதிக தரப்பில் சாட்சி மற்றும் சான்றாவணங்கள் :-** -

இல்லை

K SAKTHIVEL

Digitally signed by K SAKTHIVEL
DN: cn=K SAKTHIVEL, ou=CHENNAI, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamilnadu, c=IN
Date: 2023.11.03 16:00:44 +0530

சார்பு நீதிபதி, (மு.கூ.பொ)

திருத்துறைப்பூண்டி.